தினமலர் | திருச்சி | 29.3.2025

# இன்று ஐஐஎம் பட்டமளிப்பு விழா

## கலந்து கொள்கிறார் கவர்னர்

**திருச்சி, மார்ச் 29–**

திருச்சி ஐஐஎம் இயக்குனர் பவன்குமார்சிங் நிருபர்களிடம் நேற்று கூறியது:

திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனத்தின் (ஐஐஎம்) 13வது பட்டமளிப்பு விழா இன்று நடக்கிறது. திருச்சி ஐஐஎம் ஆட்சிமன்றக் குழு சேர்மன் ஜலாஜ் தானி தலைமை வகிக்கிறார். தமிழக கவர்னர் ரவி ஆராய்ச்சி மாணவர்கள் 3 பேர் உட்பட 457பேருக்கு பட்டங்கள் வழங்கி பேசுகிறார்.

கடந்த ஆண்டுகளை ஒப்பிடும் போது மாணவர்களை தேர்வு செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு குறைவாக உள்ளது. இதற்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் தொடர்பு இல்லை. இன்னும் சில மாதங்களில் இந்த நிலை மாறி விடும். ஐஐஎம்முக்கு புதிய ஆசிரியர்கள் தேர்வு விரைவில் நடக்கிறது. மாணவர்களுக்கான வகுப்புகள் மற்றும் விடுதிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. ஐஐஎம்மில் படித்த பலர் தொழில் முனைவோராக உள்ளனர்'' என்றார். டீன்கள் அபிஷேக், கோபால், சர்வண், காட்வின் எட்வின் உட்பட பலர் உடனிருந்தனர்.



பவன்குமார் சிங்

INDIAN INSTITUTE OF MANAGEMENT
29 MAR 2025
TIRUCHIRAPPALLI - 24

Source : Dinamalar
Date : 29/03/2025
Page No : 08